கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 266/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ஜோதிமணி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் அரசு தரப்பினரை எதற்காக தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. வனத்துறையினருக்கும் வாதிகளுக்கும் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. வனத்துறையினர் யாருக்காவது சாதகமாக நடந்து கொண்டார்களா என்றால் இல்லை. வனத்துறையினர் சட்டப்படி தான் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நாகராஜ் என்பவர் எனது தந்தை என்றால் சரிதான. அவர் வனத்துறையில் காப்பாளராக பணியாற்றினார் என்றால் சரிதான். அவர் 1982 முதல் இறக்கும் வரை பணியில் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பின்பு வனத்துறையில் இருந்து வரவேண்டிய பணப்பலன்கள் வந்துவிட்டதா என்றால் இல்லை. வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் சண்முகவள்ளி என்பவர் தாக்கல் செய்துள்ளார். சண்முகவள்ளி அவரது இளவர் மகனுக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சண்முகவள்ளிக்கும் எனது தகப்பனாருக்கும் பிறந்தவர் தான் இளவர் மணிவேல் என்றால் அது பற்றி தெரியாது. சண்முகவள்ளிக்கும் எனது தகப்பனாருக்கும் பிறந்தவர் தான் இளவர் மணிவேல் என்றும், அதனால் தான் எனது தகப்பனாரின் பணிப்பலன்களில் இளவர் மணிவேலுக்கு பாகம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2. எனது தந்தை இறந்த பிறகு எனக்கு பணப்பலன்கள் கிடைக்க வேண்டும் என வனத்துறையினரை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் சண்முகவள்ளி மகன் இளவர் மணிவேலுக்கு தகப்பனார் பெயர் நாகராஜ் என கண்டுள்ளதா என்றால்

ஆமாம். சொக்கன் என்கிற சொக்கலிங்கம் என்பவர் யார் என்றால் சண்முகவள்ளியை திருமணம் செய்து கொண்டவர். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சண்முகவள்ளிக்கும் சொக்கன் என்கிற சொக்கலிங்கத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், வழக்கிற்காக இருவரும் திருமணம் செய்து கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை நாகராஜ் சண்முகவள்ளியை 30 வருடங்களுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு பிறந்தவர் தான் இளவர் மணிவேல் என்றால் சரியல்ல.

3. எனது தந்தை எவ்வாறு இறந்தார் என்றால் பக்கவாதம் வந்து இறந்துவிட்டார். எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது சண்முகவள்ளியுடன் இருந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு நான் தான் பார்த்துக்கொண்டேன். எந்த வருடம் எனது தந்தைக்கு பக்கவாதம் ஏற்பட்டது என்றால் 2018 வருடம் ஏற்பட்டது. எனது தந்தைக்கு 2016ம் வருடத்திலேயே பக்கவாதம் ஏற்பட்டுவிட்டது என்றும், அவருக்கு மருத்துவ சிகிச்சையை சண்முகவள்ளி தான் செய்தார் என்றும், அதற்காக ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்க்ல செய்துள்ள வாரிசு சான்றிதல் பி.சா.ஆ-8ல் யார் யார் வாரிசாக காட்டப்பட்டுளள்னர் என்றால் நான், எனது தாய், தங்கை ஆகியோர் வாரிசாக காட்டப்பட்டுள்ளது. நான் வேண்டுமென்றே வாதி மணிவேலை விட்டுவிட்டு வருவாய் துறையினரை ஏமாற்றி பி.சா.ஆ.8 ஆவணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

4. எனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத போது எந்த மருத்துவமனையில் அனுமதித்தேன் என்றால் கரூர் அரசு மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் பி.சா-ஆ.6 ஆவணத்தை தவிர வேறு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 2016லேயே எனது தந்தைக்கு பக்கவாதம் ஏற்பட்டுவிட்டது என்றும், நான் அதை மறைத்து பி.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சண்முகவள்ளி தான் 2016 முதல் என் தகப்பனாருக்கு சிகிச்சை அளித்து வந்தார் என்றால்சரியல்ல. எனது தாத்தா ஆண்டியப்ப கவுண்டர். ஆண்டியப்ப கவுண்டரின் தகப்பனார் பெயர் தெரியாது. ஆண்டியப்ப கவுண்டரின் தகப்பனார் பெயர் அப்பாவு என்றால் சரியல்ல. என் தாத்தா பெயர் தான் அப்பாவு என்ற ஆண்டியப்ப கவுண்டர்.

5. தாவா சொத்து யார் சம்பாதித்தது என்றால் எங்கள் பூர்வீக சொத்து ஆகும். எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் 5 ஏக்கர் இருக்கும். நாங்கள் பாகம் செய்து கொண்டோமா என்றால இல்லை. நன்செய் நிலமா புன்செய் நிலமா என்றால் இரண்டும் உள்ளது. யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில் தான் உள்ளது. எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் வாதி இளவர் மணிவேலுக்கு ஒரு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-.R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**